# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## மாதிரிப் பரீட்சை I - 2014

தரம் :- 11 **வரலாறு – II** நேரம் :- 3மணித்தியாலம்

* பகுதி I இன் 1ம் வினா கட்டாயமானது.
* பகுதி II இலிருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து இரு வினாக்களுக்கும் விடை எழுதுக.
* எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

1)A பகுதி (i)ல் கீழ் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் பகுதி(ii) இன் கீழ் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

1. தெதுறு ஓயா ,செங்கடகல ,களனிகங்கை, நல்லூர், அநுராதகம மகியங்கணை, வளவைகங்கை, திருகோணமலை, கும்புக்கன் ஓயா, இரணைமடுக் குளம் (10புள்ளி)
2. ஜப்பான், பனாமாக்கால்வாய், லிஸ்பன் ,ஆப்கானிஸ்தான், பத்தேவியா, நன்நம்பிக்கை முனை, உரோம், விந்திய மலை (8புள்ளி)

B) கீழே A,B,C,D ஆகியவற்றின் கீழ் தரப்பட்டுள்ள வராற்றுத் தகவல்களுடன் தொடர்புடையவர்களை முறையே எழுதுக.

(i) A - அனுராதபுரத்தை தலைநகராகத் தெரிவு செய்த மன்னன்
B - கல்பொத்தக் கல்வெட்டினை அமைத்த மன்னன்
C - சோழர்களுடம் இருந்து பொலனறுவையை மீட்ட ஆட்சியாளன்
D - கலிங்க மாகனை இலங்கையில் இருந்து விரட்டிய ஆட்சியாளன் (4 புள்ளி)

அருகே காணப்படும் படங்களைஅவதானித்து விடை தருக.

(i)



a) படத்தில் காணப்படுவரின் பெயர் என்ன?
b) இவருடைய தாய் நாடு?
c) இவர் கீழைத் தேசத்தில் முதலில் வந்தடைந்த இடம் எது?
d) இவரினால் கூறப்பட்ட கூற்று எது?
(4 புள்ளி)

(ii)



a) படத்தில் காணப்படும் மன்னின் பெயர் என்ன?
b) இம்மன்னன் ஆட்சிசெய்த இராசதானி எது?
c) இவர் ஒப்பந்தம் செய்து கொண்ட வெளிநாட்டவர்களைக் குறிப்பிடுக.
d) இவருடன் தொடர்புள்ள பழமொழியை எழுதுக.
(4 புள்ளி)

## பகுதி II

2) (i) இலங்கையின் வரலாறு பற்றி அறிய உதவும் உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள் மூன்று எழுதுக. (3 புள்ளி)

(ii) இலங்கைக்கு வந்த ஆரியக் குழுக்கள் நான்கினை எழுதுக. (4 புள்ளி)

(iii) பண்டுகாபய மன்னின் முக்கியத்துவத்தை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. ( 5 புள்ளி)

(iv) இலங்கையில் பௌத்தமதம் பரவ ஏதுவாக அமைந்த 3 காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6புள்ளி)

3) (i) குளத்தின் பிரதான உறுப்புக்கள் மூன்றினை எழுதுக.

(ii) பின்வருவம் குளங்கள், கால்வாய்களை அமைத்த மன்னர்களை எழுதுக.

1. மின்னேரியா -
2. எலகரக் கால்வாய்-
3. யோத கால்வாய் -
4. கந்தளாய் குளம் -

(iii) பண்டைய இலங்கையில் நீர்ப்பாசனத்துறையில் உயர் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது என்பதற்கு இரு ஆதாரம் தந்து விளக்குக.

(iv) நீர்வள நாகரீகம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

4) (i) பின்வரும் மன்னர்கள் ஆட்சி செய்த இராசதானிகளை எழுதுக.

(i) 3ம் விஜயபாகு
(ii) 1ம் பராக்கிரமபாகு
(iii) 2ம் புவனேகபாகு

(ii) கீழே தரப்பட்ட இடங்களை தலைநகரங்களாக தெரிவு செய்த ஆட்சியாளர்களை எழுதுக.

a) யாப்பகுவ -
b) கோவிந்தமலை -
c) மினிப்பே -
d) தமபதெனிய -

(iii) இரண்டாம் பராக்கிரம பாகுவின் பணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(iv) தலைநகரங்களை தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்தமைக்கான காரணங்கள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக.

5) (i) கீழே தரப்பட்டுள்ள இனத்தவர் இலங்கையில் இறங்கிய இடங்களை முறையே எழுதுக.

A) போர்த்துக்கேயர் -
B) ஒல்லாந்தர் -
C) பிரித்தானியர் -

(ii) தரப்பட்டுள்ள கிழைத்தேச மத்திய நிலையங்களுடன் தொடர்புடைய ஐரோப்பிய நாட்டவரை எழுதுக.

a) கோவா -
b) பதேவியா -

c) சென்னை -

d) பாண்டிச்சேரி -

(iii) பலமான கோட்டை இராச்சியம் போத்துக்கேயரின் வசமாவதில் செல்வாக்குச் செலுத்திய இரு காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(iv) ஒல்லாந்தர்கள் மலையக இராச்சியத்துடன் நட்புறவுடனேயே செயற்பட்டனர் என்பதை ஆதாரம் காட்டி விளக்குக.

6) (i) இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானிய ஆளுனர்கள் மூவரின் பெயர்களைத் தருக?

(ii) பின்வரும் சம்பவங்களுடன் தொடர்புடைய மன்னர்களை எழுதுக.

1. 1638ம் ஆண்டு வெஸ்ரவோல்ட் ஒப்பந்தம்

2. தலதாமாளிகையை மும்மாடிகள் கொண்டதாக விஸ்தரித்தமை

3. சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு காரணமானவர்

4. தொன்கதரினாவைத் திருமணம் செய்து தனது ஆட்சியை உறுதிப்படுத்திய மன்னன்.

(iii) ஆங்கிலேயர் மலையக இராச்சியத்தின் மீது கவனம் செலுத்தியமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(iv) நீண்ட காலமாக சுதந்திர இராச்சியமாக விளங்கிய மலையகம் 1815ல் பிரித்தானியர் கைப்பற்ற ஏதுவாக அமைந்த காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

## பகுதி (III)

7) (i) பின்வரும் நிகழ்வுக்குரிய சரியான விடையினை எழுதுக.

1. ஆரியர் இந்தியாவிற்கு வர உதவிய கணவாய் -

2. ஆரியர்கள் இந்தியாவின் தென்பகுதிக்கு இடம்பெயரத் தடையாக இருந்த மலைத் தொடர் -

3. ஆரியர் முதலில் குடியேறிய பிரதேசத்தின் இன்றைய பெயர் (3புள்ளி)

(ii) 16 பெருங்குடியிருப்புக்களில் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்ற 4 குடியிருப்புக்களையும் எழுதுக. (4புள்ளி)

(iii) மகத இராச்சியத்தின் எழுச்சிக்கு பிம்பிசார மன்னன் கடைப்பிடித்த கொள்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5புள்ளி)

(iv) மௌயரியப் பேரரசின் வளர்ச்சிக்கு அசோக மன்னன் ஆற்றிய பணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விவரிக்குக. (6 புள்ளி)

8) (i) குப்த பேரரசின் மன்னர்கள் மூவரின் பெயர்களை எழுதுக. (3 புள்ளி)

(ii) பின்வரும் குப்த விடயங்களுக்கு உதாரணம் தருக.

ஓவியம் -

சிற்பம் -

இலக்கியம் - (4 புள்ளி)

(iii) குப்த ஆட்சிக்கால நிர்வாக முறையினை விளக்குக. (5 புள்ளி)

(iv) குப்தர் காலத்தில் கல்வி நிலை வளர்ச்சியடைந்து காணப்பட்டது என்பதற்கு மூன்று காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (6புள்ளி)

9) (i) டில்லி சுல்தான் இராச்சியத்தின் ஆட்சி செய்த மூன்று வம்சங்களை எழுதுக. (3 புள்ளி)

(ii) பின்வரும் சம்பவங்களுடன் தொடர்புடைய மன்னர்களை எழுதுக.

1. ஜெசியா வரியை இல்லாமல் செய்தவர் -

2. தாஜ்மஹாலை நினைவுச் சின்னமாக அமைத்தவர் -

3. விஜய நகரப் பேரரசை ஆட்சி செய்த பலம் வாய்ந்த அரசர் -

4. பாமினி இராச்சிய மன்னன் -

(அக்பர் புக்கான் ஷாஜஹான் பகமன்ஷா கிருஷ்ணதேவராயர் ஔரங்கசீப்)

(iii) இலங்கை தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் கலாசாரத் தொடர்புகளைக் கொண்டிருந்தது என்பதை இரு ஆதாரத்துடன் விளக்குக. (5 புள்ளி)

(iv) மானிய முறையின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6புள்ளி)

10 (i) நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட மூன்று நாடுகாண் பயணிகளின் பெயர்களைத் தருக. (3புள்ளி)

(ii) நாடுகாண் பயணங்களால் ஏற்பட்ட விளைவுகள் நான்கு எழுதுக. (4 புள்ளி)

(iii) கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஏற்பட ஏதுவான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5புள்ளி)

(iv) கைத்தொழில் புரட்சியால் உலகில் ஏற்பட்ட சாதகமான விளைவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)